# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2084 - 2018 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2018.08.10

*2084 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1104* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் – வெற்றிடம்

## அம்பலாங்கொடை நகர சபை

தென் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடங்கள்

அம்பலாங்கொடை நகர சபையில் தற்போது வெற்றிடமாக காணப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகுதி வாய்ந்த தென் மாகாண சபை அதிகார பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத் அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வாசிகசாலை உதவியாளர் | 01 | PL - 1- 2016 ரூபா 24,250-10X250-10X270-10X300- 12X330- ரூபா 36,410 பொ.நி.சு.3/2016 இன் பிரகாரம் சேர்க்கப்படும்) | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**சேர்த்துக்கொள்வதற்கான பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சீரிய நடத்தையும் சிறந்த தேகாரோக்கியமும் கொண்டிருத்தல், பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் ஒரு மாதத்திற்கு அரச வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் பரிசோதனையின் போது தகுதி அற்றவர் எனக் கருதப்பட்டால் பதவி இரத்துச் செய்யப்படும்

(iii) விண்ணப்பிக்கும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (நிரந்தரமான பதவியில் இருக்கும் உள்வாரியான விண்ணப்பதாரிக்கு உச்ச வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.)

(iv) விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக 03 வருடங்கள் தென் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். வசிப்பிட கிராம உத்தியோகத்தரால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் குறித்த பகுதி பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவராக இருத்தலாகாது.

**2. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) தகுதிகள் பரிசீலனை செய்தல் குறித்த நேர்முகப் பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும். திணைக்களத் தலைவரின் பூரண அனுமதி பெற்ற நேர்முகப்பரீட்சை குழு ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

**நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் பெற்றுத்தரும் பகுதிகளும் புள்ளிகளின் அளவுகளும்**

| புள்ளிகள் பெற்றுத்தரும் முக்கிய பகுதிகள் | உச்சப் புள்ளிகளின் அளவு | தெரிவு செய்வதற்காக கவனிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|
| 1. கல்வித் தகைமை | 30 | 50% |
| 2. மற்றும் ஏனைய தகைமைகள் | 10 | |
| 3. அனுபவம் | 10 | |
| 4. சபை அதிகார பிரதேசத்திற்குள் வசித்தல் | 45 | |
| 5. நேர்முகப் பரீட்சையின் போது காணப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

(ii) பதவிக்குரிய ஓய்வூதியத் திட்டங்கள் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு கீழ்படித்தல் வேண்டும்.

(iii) விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குதல் வேண்டும்.

(iv) இப்பதவி 03 வருட கால தகுதிகூர் காண் காலத்தை கொண்டது.

(v) இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவைகளின் நிபந்தனைகளுக்கும், நிதிச் சட்டக் கோவையின் விதிமுறைகளுக்கும், தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைகளுக்கும் இடைக்கிடை தென் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் உடன்பட்டு செயற்படுதல் வேண்டும்.

(vi) இத்துறையில் அனுபவம் பெற்றிருத்தல் விசேட திறமையாக கணிக்கப்படும்.

(vii) விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது ஆட்சேர்ப்பிற்கான கால தாமதம் ஏற்படுதல் அல்லது மாற்றங்கள் செய்தல் இவ் அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தங்கள் செய்தல் போன்றவற்றுக்கான அதிகாரம் அம்பலாங்கொடை நகர சபை தவிசாளரைப் பொறுத்தாகும்.

**3. விண்ணப்பிக்கும் முறை :**

1. இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும். (விண்ணப்பம் A4 அளவில் தயாரிக்கப்படல் வேண்டும்.) விண்ணப்பம் அனுப்பும் கடித உரையின் இடதுப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். பூரணமற்ற, தெளிவில்லாத குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவிதமான அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் நிழற் பிரதிகளை இணைத்து 2018.09.10 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் "தவிசாளர், நகர சபை, அம்பலாங்கொடை" என முகவரி இடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) கல்விச் சான்றிதழ்;
(இ) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைச் சான்றிதழ்கள் 02;
(ஈ) வதிவை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்;
(உ) தொழில் தகுதிகள் அல்லது அனுபவம் இருப்பின் அதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்;
(ஊ) சேவைச் சான்றிதழ்.

**கவனிக்க வேண்டியவை**

தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை சேவை அதிகாரியின் பரிந்துரையினூடாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் சான்றிதழ்களின் மூலச் சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தவிசாளர்,
நகர சபை, அம்பலாங்கொடை.

நகர சபை அலுவலகம்,
அம்பலாங்கொடை.
2018, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அம்பலாங்கொடை நகர சபை**

தொடர் இலக்கம் : -
(அலுவலக உபயோகத்திற்காக)

............................................. பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ..........................................................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர்கள் : ..........................................................................................................

3. நிரந்தர முகவரி : ..........................................................................................................

4. தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................................

5. பிறந்த திகதி :- ஆண்டு ................... மாதம் ........................................... திகதி .....................................................

6. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது : ..........................................................................

7. சாதி : ..........................................................................................................

8. மதம் : ..........................................................................................................

9. விவாகமானவரா/விவாகமாகாதவரா : ..........................................................................................................

10. பால் (ஆண்/பெண்) : ..........................................................................................................

11. இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின், வம்சாவழியிலா/பதிவு மூலமா? ..........................................................................

12. தென் மாகாண சபை அதிகார பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வதியும் காலம் : ..........................................................

13. கல்வித் தகைமைகள் : க.பொ.த. (சா./த.)

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9 | | |
| 5. | | | 10. | | |

14. நீர் பெற்றுள்ள ஆகக் கூடிய கல்வித் தகைமைகள் : ..........................................................................................

15. ஏனைய தகைமைகள் :

16. சேவை அனுபவம் :

17. நீர் எப்போதாவது குற்றச்சாட்டு ஒன்றிற்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

இங்கு மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். இவ்வாட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு அமைய என்னால் பிழையான தகவல்கள் எதுவும் தரப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்படுமாயின் பதவி நியமனத்திற்கு முன்னராயின் தகைமை இழப்பிற்கும் பதவி நியமனத்திற்கு பின்னராயின் பணி நீக்கத்திற்கும் உள்ளாக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

.......................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .....................................................

அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ....................................... தற்போது இத் திணைக்களத்தில் ....................... ஆக சேவையாற்றுகின்றார். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப்படவில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அதே வேளை அவரது விண்ணப்பத்தை அத்தாட்சிப்படுத்தி சமர்ப்பிக்கிறேன்.

.............................................,
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :- ...................................................................
பதவிப் பெயர் :- ...................................................................
திணைக்களம்/நிறுவனம் : ...................................................................
(பதவி முத்திரை)

திகதி :- ...................................................................

8-474

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.